2. கட்டுரைத்தலைப்பு, கட்டுரையாளர்பெயர், பதவி, துறையின் பெயர், கல்லூரி / பல்கலைக் கழகம். நகரம், அஞ்சல்குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்புஎண் ஆகியன கட்டாயம் இடம் பெற வேண்டும்.
3. ஆய்வுச்சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை (துணைத் தலைப்புகளுடனும், விவாதங்களுடனும்) ஆய்வுப்பயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்
4. மேற்கோள்கள் (References Details) எங்கெங்கு எடுத்தாளப் படுகின்றனவோ அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர் பெயர், ஆண்டு (சுவாமிநாதஐயர், உவே., 1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.
5. பார்வை நூல் விபரங்கள் (Citation Details) (ஆசிரியர் பெயர்), (வெளிவந்த ஆண்டு) புத்தகத்தின் பெயர், (வெளிவந்த பதிப்பு வரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழு முகவரி.) கட்டுரையின் இறுதியில் இடம் பெற வேண்டும்
6. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக் கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் அவசியம். இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
7. கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். (கட்டுரைத்தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் ஆங்கிலத்தில் தரலாம். ஆங்கில மொழி பெயர்ப்பு கட்டாயம் அல்ல) சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழுக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத்தமிழ் ஆய்விதழின் (UGC – Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும். அக்கட்டுரைகள் மட்டும் இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

---

கருத்தரங்கில் பங்கேற்க பதிவுக்கட்டணம் மூன்று நாட்களுக்கும்) இந்திய ஆய்வாளர்கள் – ரூ. **300.00** (இந்தியரூபா) பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி விபரம் (இந்தியா)

**Bank Name: Federal Bank**
**NAME: The Principal, KPR College of Arts Science and Research**
**Account No: 10920100196226**
**Ifsc code: FDRL0001092**

கருத்தரங்கில் பங்கேற்கும் அனைவரும் பதிவுக் கட்டணம் செலுத்தி தங்களின்பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆய்வுச் சுருக்கத்துடன் கட்டண விபரங்களை **10.09.2021** திகதிக் குள்ளாக **tamilbnc2021@kprcas.ac.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். இதே மின்னஞ்சல் முகவரிக்கு முழுக் கட்டுரையையும் **20.10.2021** திகதிக்குள் அனுப்பவும்.

கட்டுரை மாதிரி வடிவம்

**https://drive.google.com/file/d/10ZKyQ2wtfGGVr7RPRy1nolLtv1OTnG94/view?usp=sharing**

## புரவலர்

**முனைவர் செ.பாலுசாமி அவர்கள்**
முதல்வர்,KPR கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்

## கருத்தரங்கத்தலைமை

**முனைவர் ப.முத்துக்குமாரவடிவேல் அவர்கள்**
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை, பைந்தமிழ் உயராய்வு மையம், KPR கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்

**முனைவர் பா.இரவிக்குமார் அவர்கள்,**
உதவிப்பேராசிரியர், சுப்பிரமணியபாரதியார்தமிழியற்புலம், புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி

**முனைவர் ர.சுரேஷ் அவர்கள்**
முதன்மைஆசிரியர், சர்வதேசத்தமிழ்ஆய்விதழ், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா

## ஆலோசனைக் குழு

**முனைவர் கு.குமுதாதேவி அவர்கள்,**
வணிகவியல் துறை முதன்மையர்,
KPR கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்

**முனைவர்க.சந்திரிகாஅவர்கள்**
பேராசிரியர் மற்றும் புல முதன்மையர் (பொறுப்பு)
சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுச்சேரி.

**முனைவர் சு.சசிகலா அவர்கள்,**
கணினி அறிவியல் துறை முதன்மையர்,
KPR கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.

**முனைவர் ப. சியாம் சுந்தர் அவர்கள்,**
மேலாண்மைத் துறை முதன்மையர்,
KPR கலைஅறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.

## கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் ப.கோகுல்நாத் அவர்கள்,**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
பைந்தமிழ் உயராய்வு மையம்,
KPR கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.

**முனைவர் மு.கருணாநிதி அவர்கள்**
இணைப்பேராசிரியர்,
சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம்,
புதுச்சேரி

**முனைவர் வெ.அர.தாரணிஅவர்கள்**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
பைந்தமிழ் உயராய்வு மையம்,
KPR கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.

**முனைவர் இரா. ஸ்ரீவித்யா அவர்கள்**
உதவிப்பேராசிரியர்,
சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம்,
புதுச்சேரி

**முனைவர் பி. அனுராதா அவர்கள்**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
பைந்தமிழ் உயராய்வு மையம்,
KPR கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.

**திருமதி நா. அம்பிகா அவர்கள்**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
பைந்தமிழ் உயராய்வு மையம்,
KPR கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.


தொடர்புக்கு
✆ 73732 43066, 98425 79547, 80723 34073
Email: tamilbnc2021@kprcas.ac.in
www.kprcas.ac.in | irjt.iorpress.org | www.pondiuni.edu.in


**புதுவைப் பல்கலைக்கழக**
**சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,**
**KPR கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி**
**தமிழ்த்துறை பைந்தமிழ் உயராய்வு மையம்**
மற்றும்
**சர்வதேசத் தமிழ்ஆய்விதழ்**
இணைந்து நடத்தும்

# பன்முக வாசிப்பில் பாரதி

(தேசியக் கருத்தரங்கம்)



## மகாகவி சுப்பிரமணிய பாரதியின் வாழ்வு மற்றும் படைப்புகள் குறித்த பன்முகவாசிப்புகளுக்கான ஆய்வுக் கருத்தரங்கம்

## (27.09.2021 – 29.09.2021)

ஆய்வுச்சுருக்கம் மற்றும் கட்டுரையினைச் சமர்ப்பிக்க.

**Email: tamilbnc2021@kprcas.ac.in**

தொடர்புக்கு
**பாரதியார் நினைவு நூற்றாண்டு விழாக்குழு**
**✆ 73732 43066, 98425 79547, 80723 34073**



பேரன்புடையீர், வணக்கம்,

## KPR கல்வி நிறுவனங்கள் & குழுமங்கள்

தலைவர் டாக்டர் K.P ராமசாமி அவர்களின் ஒப்புயர்வற்ற உழைப்பின் உன்னத உயர்வு தான் இன்றைய KPR கல்வி நிறுவனங்கள் மற்றும் குழுமங்களின் செயல்பாடுகள் ஆகும். இவ் விருட்சத்தின் கீழ் கிளைபரப்பி நிற்பன KPR பொறியியல் கல்லூரி,KPR கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி, IAS அகாடமி, பெண்கள் கல்விப் பிரிவு மற்றும் பஞ்சாலை ஆகியனவாகும். 2019 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட KPR கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியானது, கோயம்புத்தூர் மாவட்டத்தின் தலைசிறந்த கல்லூரியாகும். உயர்தரக் கல்வியும் மிகச் சிறந்த உள்கட்டமைப்புடனும் இயங்கி வருகின்றது. பாரதியார் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள இக்கல்லூரி வணிகவியல், கணினி அறிவியல், மேலாண்மையியல் முதலிய துறைகள் துறை வல்லுநர்கள் இயக்கப்பட்டு வருகின்றது. பயிலும் மாணவர்களுக்கு துறைசார்ந்து 100% வேலை வாய்ப்பினை வழங்கும் கல்வி நிறுவனம். ஆண்டுக்கு 5 இலட்சம் வருவாய் கிட்டும் வகையில் பணியமர்த்தப்பட்டது சிறப்பிற்குரியது. கல்லூரியின் தமிழ்த்துறை பைந்தமிழ் உயராய்வு மையமானது பன்முக நோக்கில் மாணவச் சமுதாயத்திற்கு பண்பாடு, கலாச்சாரம் மற்றும் சமுதாயச் சிந்தனைகளைப் பயிற்றுவித்து ஆற்றல்மிக்க இளைய சமுதாயத்தை உருவாக்கி வருகிறது. அவ்வண்ணம் பாரதியாரின் நினைவு நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஸ்ரீசுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,

புதுச்சேரியை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்ற புதுவை மத்திய பல்கலைக் கழகமானது இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. ஒப்பற்ற கல்வி சேவையின் மூலம் ஆற்றல் மிக்க மனித வளங்களை உருவாக்கி வருகின்றது. உலகத் தரத்திலான தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் முதன்மை பெற்ற நிறுவனமாகத் திகழ்கின்றது. இந்நிறுவனத்தின்கீழ் 1986 – ல் தொடங்கப்பட்ட தமிழ்த்துறையானது 2003 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பள்ளியாக தரமுயர்த்தப்பட்டு இன்று வரை தமிழ்மொழி மற்றும் இலக்கிய ஆராய்ச்சியில் தனித்தடம் பதித்துள்ளது. புகழ்பெற்ற பேராசிரியப் பெருமக்கள் இப்புலத்தில் பணியாற்றி யிருக்கின்றனர். க.நா.சு, க.பா.அறவாணன் போன்ற தமிழுலகம் நன்கறிந்த அறிஞர் பெருமக்கள் இப்புலத்தின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி யிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஆற்றல்சால் மாணவப் பெருந்தகைகளை உருவாக்கித்தந்ததில் இப்புலம் தன்னிகரற்றுத் துலங்குகின்றது. தொடர்ந்து தமிழ்க்கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக பல்வேறு ஆக்கப் பணிகளுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## சர்வதேசத்தமிழ்ஆய்விதழ்

சர்வதேசத்தமிழ் ஆய்விதழ், இந்தியாவின்முதல் Google Scholar, CrossRef indexed மற்றும் DOI எண்பதிவு பெற்ற தமிழ் ஆய்விதழாகவும், பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழாகவும், பல்வேறு ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகளையும் கருத்தரங்குகளையும் முன்னெடுத்து தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்ற ஆய்விதழாகவும் இருந்து வருகின்றது. அத்துடன் தமிழாய்வுகளை உலகத்தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் ஆய்வுப்புல வல்லுநர்களின் மதிப்பீட்டைப் பெற்று தரமான ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல், அவற்றை உலகளாவிய பயன்பாட்டிற்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்ற வகையில் எண்ணிமப்படுத்துதல் (digitize), குறுந்திட்ட ஆய்வுகளுக்கு நிதியுதவி அளித்தல் முதலிய பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மேலும் பன்னாட்டுத் தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் ஆய்வு வளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வாளர்களுக்கும், ஆய்வுப்புல அறிஞர்களுக்குமிடையே ஆய்வுசார்ந்து உரையாடுவதற்கும் விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும், அதற்கான சூழலையும் ஏற்படுத்தித்தருதல், தமிழ்ச் சூழலில் இதுவரையிலான ஆய்வுப் போக்குகளையும் அவற்றின் போதாமைகளையும் மதிப்பிட்டு, புதிய களங்களில் புதிய அணுகு முறைகளில் ஆய்வு செய்ய ஆய்வாளர்களை ஊக்குவித்தல், ஆய்வுத்திறன் மேம்பட்ட செழுமை மிக்கதொரு ஆய்வாகச் சமூகத்தை உருவாக்குதல் போன்ற பல்வேறு ஆய்வுச் செயல்பாடுகளில் அதிக அக்கறையோடு முன்னிற்கின்றது. இதன் தொடர்ச்சியாக இக்கருத்தரங்கை இலங்கை மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்து நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## கருத்தரங்கநோக்கம்

பாரதி நம் நாட்டின் மகத்தான கவி. தேசியகவி என்பதோடு மட்டுமல்லாமல் தலைசிறந்த உலகமகா கவிச்சக்ரவர்த்திகளில் ஒருவராக வைத்துக் கொண்டாடப்படவேண்டியவர். புதுமையும் எளிமையும் கொண்ட வளமையான கவிதைகளை எளியமக்களுக்கு கடத்திய ஆற்றல் மிக்க கலைஞர். இந்தியச் சிந்தனைமரபை, தொன்மங்களை சமுகப்புரட்சிக்கானதாக உருமாற்றியவர். தேசிய இயக்ககால வரலாற்றை, விடுதலையின் வரலாற்றைப் பாரதியைத் தவிர்த்துவிட்டு எழுதிவிட முடியாது. தமிழ்ச் சமூகத்தில் கவிதைகுறித்த ரசனையை ஏன்? வாசிப்பு முறையையே மாற்றிய இரசவாத எழுத்துச்சித்தர் பாரதி என்றால் அது மிகையல்ல. தமிழ்க் கவிதைகளை அரசியலாக சமூக மாற்றத்திற்கான ஆயுதமாக மாற்றி வெற்றிகண்டவர். நவீன கவிதையின் முன்னோடி மட்டுமல்ல நவீன சிந்தனையின், நவீன வாழ்க்கைமுறையின் முன்னோடியும் பாரதிதான். சமூகத்தின் சகல பிரச்சினைகளையும் தம் படைப்புகளில் பேசியவர் பாரதியைத் தவிர வேறோருவர் இல்லை எனலாம். எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியின்றி வாழ்ந்து காட்டிய மகாகவியின் நினைவைப் போற்றும் வகையிலும் அவருடைய வாழ்வும் படைப்பும் குறித்த சிந்தனைகள் இன்றைய சமூகத்திற்கான படிப்பினையாக விளங்கும் என்ற நோக்கிலும் பாரதி நினைவு நூற்றாண்டை கொண்டாடுவதோடு பாரதியியல் ஆய்வாளர்களை ஒருங்கிணைத்து அவருடைய படைப்புகளை ஆராய்ந்துப் புதுமைகளை வெளிக்கொணரவும் திட்டமிடப்பட்ட நிலையில் மூன்றுநாள் தேசியக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளோம்.

## ஆய்வுப்பொருண்மைகள்

பாரதியின் நினைவு ஒரு நூற்றாண்டைக் கடந்தும் நிலைத்திருக்கின்ற சூழலில் இன்றைய அறிவாராய்ச்சிக் குகந்தவாறு மகாகவி பாரதியாரின் வாழ்வு மற்றும் படைப்புகள் குறித்து பல்வேறு விதமான வாசிப்புகளுக்கும் உட்படுத்தி ஆராய்ந்தெழுதலாம். பாரதியின் சமூக விடுதலை, தேசவிடுதலை, மெய்யியல் நோக்கு, பெண்விடுதலை, கவித்துவம், சமூதாயப் பார்வை, சமயப்பார்வை, அரசியல், இலக்கிய கொள்கை, மனிதநேயசிந்தனை, பாரதியை இந்திய மற்றும் உலகக் கவிஞர்களோடு ஒப்பிடுதல், பாரதியின் தொன்ம மீட்டுருவாக்கம், பாரதியின் கட்டுரைகள், சிறுகதைகள், இதழியல் பணி, கேலிச் சித்திரங்கள், பாரதியின் கல்விச் சிந்தனைகள், விடுதலைக் காதல், இலக்கிய உத்திகள் என இன்னபிறவும் ஆய்வுக்களங்களாக அமையலாம். கருத்தரங்கில் பங்கேற்கும் ஆய்வாளர்கள் தங்களுடைய ஆய்வுச்சுருக்கத்தை (ABSTRACT) 10.09.2021 திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கருத்தரங்க நாளன்று தங்களது ஆய்வுக் கருத்துக்களை அறிஞர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் முன்னிலையில் உரைக்கோவையாக வழங்க வேண்டும் (Oral Presentation) ஆய்வுச்சுருக்கம் கருத்தரங்க நாளன்று நூலாக வெளியிடப்படும். கருத்தரங்க பின்னுட்டத்தினடிப்படையிலும், மதிப்பீட்டினடிப்படையிலும் கட்டுரையை மறு சீராய்வு செய்து முழுக்கட்டுரையையும் செப்டம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க **வேண்டும்.**

ஆய்வுச் சுருக்கம் சமர்ப்பிக்க - 10.09.2021

ஆய்வுக்கட்டுரையை முழுவதுமாகச் சமர்ப்பிக்க - 20.10.2021

மின்னஞ்சல் முகவரி - tamilbnc2021@kprcas.ac.in

## ஆய்வுச்சுருக்கம் (ABSTRACT)

ஆய்வுச்சுருக்கம் என்பது தங்களுடைய முழுக் கட்டுரையையும் சுருக்கமாகப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். குறைந்தது 150 வார்த்தைகளிலும் 250 வார்த்தைகளுக்கு மிகாமலும் அமைந்திருக்க வேண்டும், ஆய்வுச்சுருக்கத்துடன் கட்டுரைத் தலைப்பு, கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின் பெயர், கல்லூரி/பல்கலைக்கழகம். நகரம், அஞ்சல்குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியன கட்டாயம் இடம்பெற வேண்டும்.

## ஆய்வுக்கட்டுரைஅமைப்பு

1. ஆய்வுக்கட்டுரையைச்சொற்கோப்பில் (Word document) A4 தாளில் 1.15 இடைவெளியுடன் 9 அச்சுப் புள்ளியில் யுனிகோடு (Unicode) எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்